**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.241/2022**

PW-1

| Name | முருகன் (PW1) | | |
|---|---|---|---|
| Father's Name | கருப்பையா | | |
| Village | தேவம்பாளையம் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10**th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused No.1 and 2 present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

**1)** நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு என் மகன் வைத்துயிருக்கும் இலாஸ்டிக் கம்பெனியில் வேலையில் செய்கிறேன். கடந்த 30.04.2022 ம் தேதி மாலை வாக்கில் எனக்கு கண்ணாடி வாங்க அவிநாசிக்கு இருசக்கர வாகனத்தில் என் மகன் ஓட்ட நான் நடுவிலும் என் மனைவி எனக்கு பின்னும் அமர்ந்து வரும்போது, அவிநாசி ரோட்டில் பெட்ரோல் பங்க் எதிரில் வந்தபோது இரண்டு நபர்கள் என் மனைவியின் கழுத்தில் இருந்த செயினை பறிக்க முயன்றார்கள் என் மனைவி கத்த நான் உடனே சத்தம்போட்டேன். எதிரிகள் செயின் பறிக்க வந்த வாகனத்தை பின்தொடர்ந்து சென்றபோது, அவர்கள் தப்பிச்சென்றுவிட்டார்கள் அவர்களை பிடிக்க இயலவில்லை. பிறகு நாங்கள் காவல் நிலையம் சென்றோம். என் மகன் புகார் கொடுத்தார். 2 மாதங்கள் கழித்து போலீசார் என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நான் காவல் நிலையம் செல்லவில்லை என் மகனும் என் மனைவியும் காவல் நிலையம் சென்றார்கள் அங்கு எதிரிகளை அடையாளம் காண்பித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :

சம்பவ சமயத்தில் நான் தலைகவசம்அணிந்து இருந்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தை நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். சம்பவ நடந்த இடமானது அதிக போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். எனது மனைவி அணிந்துயிருந்த நகையின் வடிவமைப்பை பற்றி குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை நான் அவிநாசி ரவுண்டான வரை நான் துறத்தி சென்றேன். எதிரிகளின் வாகன எண் அத்ன் பெயர் பற்றி நான் சொல்லவில்லை. எதிரிகளின் அங்க அடையாளங்கள் பற்றியும் நான் சொல்லவில்லை. காவல்த்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை எனது மனைவியை தான் விசாரணை செய்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும் அவ்வாறு நடந்துயிருந்தால் நாங்கள் கீழே விழுந்து இருப்போம் என்றால் சரியல்ல. நகையை பறித்துயிருந்தால் என் மனைவிக்குகாயம் ஏற்பட்டுயிருக்கும் என்றால் காயம் இருந்தது. பறிக்க முயன்ற செயினை செயினை போலீசார் விசாரணைக்கு உட்படுத்தினேன். நகை எனது மனைவியுடையது என்பதை காண்பிக்க நான் காவல் நிலையத்தில் ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |